அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07
1994, யூன் மாதம் 15 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச அதிபர்கள் அனைவருக்கும்.

## தேர்தல்களில் போட்டியிடுவதற்காகச் சேவையிலிருந்து விலகிய கிராம உத்தியோகத்தர்கள்.

தேர்தல்களில் போட்டியிடுவதற்காகத் தமது பதவிகளிலிருந்து விலகிய ஒரு கிராம உத்தியோகத்தரை அவருடைய கல்வித் தகுதிகளுக்கு அமைவான முறையில் தகுந்த பதவியொன்றுக்குப் பரிசீலனை செய்யப்படுவதற்காக குழாமில் உட்சேர்த்தல் வேண்டும்.

2. மேலும் அத்தகைய ஓர் உத்தியோகத்தர் ஓய்வுச் சம்பளத்துக்குரிய பத்து (10) ஆண்டுச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் ஆகக் கூடிய வயதெல்லை அறுபது (60) என்று மட்டுப்படுத்தப்பட்டுச் சேவைக்கால நீடிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

3. எதிர்காலத்தில் ஒரு கிராம உத்தியோகத்தர் ஒரு தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பதவியிலிருந்து விலகுமிடத்து அவர் அரச துறையிலான ஒரு பதவிக்கு உரித்து அற்றவராவார். இது பற்றி அவரின் நியமனக் கடிதத்தில் உறுதியாக குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பம்: வை. பி. புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.